# ஊடக அறிக்கை

22 ஏப்ரல் 2010.

## பிரித்தானியத் தமிழர் பொதுத் தேர்தலிற் பங்கேற்றல் வேண்டும்

ஐக்கிய இராச்சியத்தில் நாடாளுமன்ற உறுப்பினரைத் (நா.உ.) தெரிவுசெய்வதற்கான பொதுத் தேர்தல் மே 6ஆம் நாள் நாட்டிலுள்ள அனைத்துத் தேர்தல் தொகுதிகளிலும் நடைபெறும். நாடாளுமன்றப் பொது அவையில் ஐந்து ஆண்டுகள் வரை இவர்கள் தத்தம் தொகுதிகளைப் பிரதிநித்துவம் செய்வர். ஒவ்வொரு தொகுதியிலும் பொதுவாகப் பல வேட்பாளர் போட்டியிடுவர். இவர்களில் ஆகக்கூடிய வாக்குகளைப் பெறுபவர் தொகுதி மக்களது நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்படுவார். பொதுமக் கள் முதன்மையானதாகக் கருதும் விடயங்களையும் அவர்களைப் பாதிக்கும் விடயங்களையும் இவ்வுறுப்பினர் எடுத்துரைப்பதோடு நாடாளுமன்ற முறைகளுக்கமையக் கூட்டாக நாட்டுக்கான சட்டங்களை இயற்றவும் உதவுவர்.

ஐக்கிய இராச்சியம் எவ்வாறு ஆளப்படவேண்டும் என்பதையும், எந்த அரசியல் கட்சியும் எந்த வேட்பாளரும் உங்களைப் பிரதிநிதிப்படுத்த வேண்டுமென்பதையும் உறுதிப்படுத்த இதுவே உங்களுக்குக் கிடைத்துள்ள சிறந்த வாய்ப்பாகும். பொருளாதாரம், சுகாதாரம், வேலைவாய்ப்பு, கல்வி, குடிவரவு, சமூக நலன், பாதுகாப்பு, வெளிநாட்டு உறவுகள் ஆகியன முதன்மையான கொள்கைகளாக அமைகின்றன. உங்கள் தொகுதிக்கான அடுத்த நாடாளுமன்ற உறுப்பினரையும் எமது உற்றார் உறவினரின் நலன்களைத் தீர்மானிக்கக் கூடிய ஐக்கிய இராச்சியத்தின் சிறீலங்கா மீதான வெளிநாட்டுக் கொள்கையை வகுக்கவுள்ள அடுத்த அரசையும் தெரிவுசெய்யக் கிடைத்த இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளல் இன்றியமையாததாகும்.

பிரித்தானியத் தமிழர் பேரவையானது ஐக்கிய இராச்சியத்திலுள்ள அனைத்து அரசியற் கட்சிகளுடனும் இணைந்து செயற்படுகின்ற பக்கசார்பற்ற ஓர் அமைப்பாகும். சிறீலங்காவில் அல்லலுறுகின்ற தமிழ் மக்களுக்கு ஒரு நிரந்தரமான தீர்வைக் கொணர்ந்து அவர்கள் தம் மரபுவழித் தாயகத்தில் அமைதியுடனும் நீதியுடனும் பெருமையுடனும் வாழ வழிசெய்ய இப்பேரவை உழைத்து வருகின்றது.

தமது தொகுதிகளிலுள்ள தமிழரது முதன்மையான சிக்கல்களைத் தீர்ப்பதில் ஆர்வம்காட்டி உழைத்த நாடாளுமன்ற உறுப்பினருக்கு பிரித்தானியத் தமிழர் தொடர்ந்தும் ஆதரவு நல்க வேண்டும். தமிழருடன் ஈடுபாடு குறைவாக அல்லது இல்லாதிருந்த தொகுதிகளில், உங்களது முதன்மையான சிக்கல்களை நாடாளுமன்றத்திற்கு எடுத்துச் செல்லக் கூடிய வேட்பாளருடன் உங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். பிரித்தானியத் தமிழர் மேற்கூறிய வகையில் தமது வாக்குளைப் பயன்படுத்துவதோடு தம் நண்பர், உறவினர் ஆகியோரையும் அவர்களுக்குரிய மக்களாட்சி உரிமையைப் பயன்படுத்துமாறு ஊக்குவிக்க வேண்டும். தமது தொகுதியில் போட்டியிடும் நாடாளுமன்ற வேட்பாளருக்கு உதவும்பொருட்டு அவர்களது துண்டு அறிக்கைகளை வீடுவீடாகச் சென்று போடுவதற்கும் ஓரளவு நேரத்தை ஒதுக்கிக்கொள்ள வேண்டும்.

2010 ஆண்டின் உள்ளூர் அவைத் தேர்தல்கள் நடைபெறுகின்ற அதே நாளில் பொதுத் தேர்தலும் நடைபெறும். உள்ளூர் அவைத் தேர்தலில் உங்களது உள்ளூருக்கான பணிகளை ஆற்றவுள்ள அவை உறுப்பினரைத் தெரிவு செய்கின்றீர்கள்.
ஐக்கிய இராச்சியத்தின் நாடாளுமன்றத்திலும் உள்ளூர் அவைகளிலும் தமது மக்களாட்சி உரிமைக் குரலை ஒலிக்கச்செய்யும் பொருட்டுத் தகமையுடைய அனைவரும் தம்மை வாக்காளராகப் பதிவு செய்துகொள்ள வேண்டுமெனப் பிரித்தானியத் தமிழர் பேரவை வலியுறுத்தகின்றது.

நிறைவு பெற்றது

ஊடகத்தொடர்களுக்கு:
ஊடகப்பிரிவு – பிரித்தானிய தமிழர் பேரவை
தொலைபேசி:- 020 8808 3224
மின்னஞ்சல்:- media@tamilsforum.com